063755

சுருக்கம்

உயர்கல்வி – பொதுப்பணிகள் – கல்வித் தகுதி – வேலைவாய்ப்பிற்காக பி.இ. (மின்னியல் மற்றும் மின்னணுவியல்) பட்டப்படிப்பினை பி.இ. (மின்னியல்) பட்டப் படிப்பிற்கு இணையாகக் கருதுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.262

நாள் 28.7.2009.
ஆடி 12,
திருவள்ளுவர் ஆண்டு 2040.

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 20.12.1993.

2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரின் கடித எண்.2724/RND-F1/2007, நாள் 20.11.2008.

-----

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2, ஒருங்கிணைந்த பொறியாளர் பணித் தேர்வுக்கு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வணையத்திற்கு இளநிலை மின் ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகளுக்கான உதவி ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கு நேரடித் தேர்வுக்கு விண்ணபித்திருந்த சில விண்ணப்பதாரர்கள் பி.இ. (மின்னியல் மற்றும் மின்னணுவியல்) பட்டப்படிப்பினை முடித்திருந்ததாகவும், எனவே பி.இ. (மின்னியல் மற்றும் மின்னணுவிப்பல்) பட்டப்படிப்பினை பி.இ. (மின்னியல்) பட்டப்படிப்பிற்கு இணையானதாகக் கருதலாமா என்பது குறித்து முடிவெடுக்க, இப்பொருளானது 17.11.2008 அன்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நடைபெற்ற 25வது இணைத் தகுதிக்குழுவில் வைக்கப்பட்டது என்றும், அக்குழுவானது வேலை வாய்ப்பிற்காக பி.இ. (மின்னியல் மற்றும் மின்னணுவியல்) பட்டப் படிப்பினை பி.இ. (மின்னியல்) பொறியியல் பட்டப்படிப்பிற்கு இணையானதாகக் கருத பரிந்துரை செய்துள்ளது என்றும் தெரிவித்து, இது தொடர்பாக ஆணை வெளியிடுமாறும் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட பரிந்துரையினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்த பின், 17.11.2008 அன்று நடைபெற்ற இணைத் தகுதிக்குழுவின் பரிந்துரையை ஏற்கலாம் என முடிவு செய்துள்ளது. அவ்வாறே, பி.இ. (மின்னியல் மற்றும் மின்னணுவியல்) பட்டப்படிப்பினை பி.இ. (மின்னியல்) பட்டப்படிப்பிற்கு இணையானதாக கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25 / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.

நகல்
செயலாளர், எரிசக்தித்துறை, சென்னை–9.
செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 29/7/09